## கருவலகஸ்வெவ பிரதேச சபை

## புத்தளம் மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 25 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 17 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 13 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

----------------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கருவலகஸ்வெவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசேட்டமும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

--------------------------------------------

பின்வரும் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு மே 01 திகதி முதல் திசெம்பர் 31 திகதி வரை கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண தொகையினை கணித்து கணக்கீடு செய்திருக்கவில்லை. அத்துடன், ரூபா 500,000 இற்கான மதிப்பீட்டுத் தொகையினை கணக்குகளுக்கு எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2014 ஆண்டின் போது கருவலகஸ்வெவ பிரதேச செயலகத்திலிருந்து நன்கொடை ஒன்றாக கிடைத்திருந்த 30 வீதி விளக்கு தொகுதிகளின் பெறுமதியினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) இபலோகம நீர்ச் செயற்திட்டத்தில் நிலுவை நீர் வரித் தொகை ரூபா 270,905 இனால் குறைவாக காட்டப்பட்டிருந்தமையால் அப் பெறுமதியால் மீளாய்வாண்டின் பெற வேண்டிய கணக்குகளின் பெறுமதி மற்றும் மிகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

02 கணக்கு விடயங்கள் தொடர்பாக துணைப் பதிவேடுகளில் காணப்படும் மீதிகள் மற்றும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 275,876 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது.

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 24,306,134 உம் மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 24,775,207 ஆகும்.

1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

---

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 129(2)(அ) மற்றும் (ஊ) பிரிவின் பிரகாரம் பிரதேச சபைக்குக் கிடைக்க வேண்டிய வருமானம் முறைப்படி அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அத்துடன் பிரிவு 150 இன் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் வர்த்தக நிலையங்கள் அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்தாமல் தவர்ந்துகொள்ளும் நபர்கள் தொடர்பாக தேவையான சட்ட நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. மேலும் சட்டத்தின் பிரிவு 158 இன் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் வீத வரி மற்றும் ஏக்கர் வரி செலுத்த தவறும் நபர்களுக்கு சொந்தமான அசையும் சொத்துக்கள் தடைசெய்து நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

---

2.1 நிதி விளைவுகள்

---

சமர்ப்பித்திருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 4,935,974 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,245,205 ஆகும். மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது கிடைத்திருந்த முறையே ரூபா 12,922,423 உம் மற்றும் ரூபா 7,229,051 உம் மூலதன உதவி மற்றும் முறையே ரூபா 14,183,871 உம் மற்றும் ரூபா 10,081,320 இற்கான மூலதன செலவுகளை கணித்த பின்னர் மீளாய்வாண்டின் ரூபா 3,674,526 ஆக மாறியிருந்ததுடன் முன்னைய ஆண்டில் ரூபா 607,064 இற்கான பற்றாக்குறை ஒன்று ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 4,281,590 இற்கான முன்னேற்றமொன்று காணப்பட்டது.

2.2 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

-----------------------------------------------------------------

மீளாய்வாண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த கணக்குகளின் பிரகாரம் தொழிற்படு மூலதன விகிதாசாரம் (நடைமுறைச் சொத்துக்கள்: நடைமுறைப் பொறுப்புக்கள்) 1.46:1 அதற்கு முன்னைய ஆண்டின் போது 1.36:1 ஆகக் காணப்பட்டது.

2.3 வருமான நிருவாகம்

-----------------------------------

2.3.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

---------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2014 மதிப்பிடப்பட்ட | 2014 உள்ள வாறான | 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை | 2013 மதிப்பிடப்பட்ட | 2013 உள்ள வாறான | 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீதவரி | 200 | 143 | 57 | 200 | 149 | 51 |
| வாடகை | 588 | 553 | 35 | 634 | 631 | 03 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 805 | 660 | 145 | 595 | 521 | 74 |
| சேவைக் கட்டணம் | 669 | 1,266 | (597) | 657 | 1,183 | (506) |
| நீர் வரி - கருவலகஸ்வெவ | 594 | 578 | 16 | - | - | - |
| மொத்த நீர் செயற்திட்டம் | 169 | 134 | 35 | - | - | - |

2.3.2 வீத வரியும் வாடகையும்

------------------------------------------

(அ) மீளாய்வாண்டிற்கான வீத வரி பில்போடப்பட்ட தொகையில் அறவீடு செய்யப்படல் நூற்றிற்கு 72 ஆக காணப்பட்டதுடன், 2014 ஆண்டு ஆரம்பத்தில் ரூபா 81,900 இற்கான நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், அவற்றில் ரூபா 44,300 தொகையினை அறவிடப்பட்டிருந்தது. அத்துடன் வருட இறுதியில் ரூபா 72,300 இற்கான நிலுவை ஒன்று காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டு இறுதி வரை 09 வாகனங்களுக்கு ரூபா 1,651,521 இற்கான எரிபொருள் செலவு ஒன்று சபை வருமானத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்த போதும் அவற்றின் ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்தப் பொழிப்புக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2.3.3 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-----------------------------------------------------------------------------------------------

2014 ஆண்டில் உள்ளவாறு முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப் பணம் தொடர்பாக கிடைக்க வேண்டிய பணத்தில் ஒரு பகுதி அறவிடப்பட்டிருந்ததுடன், பெற வேண்டிய கணக்கு என வருடாந்த பாதீட்டில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த தொகையை கணக்கீடு செய்திருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------------

3.1 மனித வள முகாமைத்துவம்

-------------------------------------------------

சபையின் செயலாளர் பதவி பல வருட காலமாக வெற்றிடமாக காணப்பட்டதுடன், 11 இரண்டாம் தர பதவிகளும், 04 ஆரம்பத் தர பதவிகளும் வெற்றிடமாக காணப்பட்டது. வேலைப் பரிசோதகர்கள், காவலாளிகள் மற்றும் நீர் குழாய் தொழிநுட்பவியலாளர் பதவிகளுக்காக மாதாந்த மற்றும் நாளாந்த படி மீது அமைய அடிப்படையில் மூன்று ஊழியர்கள் சேர்க்கப்பட்டு சம்பளம் வழங்கப்பட்டுள்ளது.

3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

----------------------------------------------------------------------------------------------------

ரூபா 1,319,050 தொகை பெறுமதியான WPLE-7454 கொண்ட மஹேந்திரா சிங்கல் கப் வண்டி மற்றும் பெறுமதி கணிக்கப்படாத குழாய் கிணறு உபகரணங்கள் நீண்ட காலம் முதல் பயன்படுத்தப்படாமல் சபை வளவில் காணப்பட்டது. அத்துடன் சபைக்குச் சொந்தமான ரூபா 1,678,223 தொகை பெறுமதியான 3 கட்டிடங்கள், பெறுமதி கணிக்கப்படாத கட்டிடம் ஒன்று, ரூபா 155,000 தொகை பெறுமதியான பொறித் தொகுதியும் மற்றும் பெறுமதி மதிப்பிடப்படாத 4 வாகனங்களை பயன்படுத்தப்படாமல் சபை வளவில் நிறுத்தப்பட்டிருந்தது.

4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்

-----------------------------------------------------------------

4.1 அகக் கணக்காய்வு

-------------------------------

வடமேல் மாகாண நிதி விதிக் கோவையின் விதி 82.8 இன் பிரகாரம் சபையின் அகக் கணக்காய்வுத் திட்டம், மீளாய்வாண்டிற்கான அகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருக்கவில்லை.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வாகனக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்